# பிரைம் லேண்ட்ஸ் ரெசிடென்சிஸ் பிஎல்சியின் அனைத்து பங்குதாரர்களுக்குமான அறிவிப்பு

நிறுவனத்தின் 17 வது ஆண்டு பொதுக் கூட்டம் ஆனி 30ம் திகதி காலை 10.00 மணிக்கு ஆன்லைன் மீட்டிங் பிளாட்ஃபார்ம் மூலம் நடைபெறும் என்பதற்கான அறிவிப்பு.

---

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக, அச்சிடும் காகிதத் தட்டுப்பாடு மற்றும் அச்சிடுவதற்கான செலவு காரணமாக, இந்த ஆண்டு, ஆண்டு அறிக்கையின் அச்சிடப்பட்ட நகலை எங்களால் கோரக்கூடிய பங்குதாரர்களுக்கு வழங்க முடியவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

எனவே, கொழும்பு பங்குச் சந்தையால் 2022 மே 27ம் திகதியிடப்பட்டு வெளியிடப்பட்ட சுற்றறிக்கை எண். 04/2022 இன் படி, 2021/22 ஆம் ஆண்டிற்கான அச்சிடப்பட்ட வருடாந்த அறிக்கைகள் வெளியிடப்படாது என்பதை பங்குதாரர்களுக்கு தெரிவிக்க, நிறுவனம் இந்த பொது அறிவிப்பை வெளியிடுகிறது.

எவ்வாறாயினும், பங்குதாரர்களின் உரிமையை பாதுகாத்து நிலைநிறுத்துவதோடு, எவ்வித பாராபட்சமும் இல்லாது வருடாந்த அறிக்கையை அணுகவும் வருடாந்த பொதுக்கூட்டத்தில் பங்கேற்பதற்குமான அறிவிப்புகள், CSE இணையதளத்திலும் (https://www.cse.lk/home/company-info/PLR.N0000/financial) மற்றும் நிறுவன இணையத்தளத்திலும் (https://www.primeresidencies.lk/investor-relations) கூட்டத்திற்கான அறிவிப்பு பதிவேற்றியுள்ளதோடு, அது தொடர்பான ஆவணங்கள் உட்பட "ஆன்லைன் மீட்டிங் பிளாட்ஃபார்ம் மூலம் வருடாந்த பொதுக் கூட்டத்திற்கான (AGM) வழிகாட்டுதல்கள் மற்றும் பதிவு செயல்முறை உட்பட பங்குதாரர் விபரங்களை "பங்குதாரர் விபரங்களை பதிவு செய்தல் - ஆன்லைன் பங்கேற்பு - 2022" ஊடாக பார்வையிடலாம். (விண்ணப்பப்படிவம்)

## ஆண்டுப் பொதுக் கூட்டத்திற்கான அறிவிப்பு

பிரைம் லேண்ட்ஸ் ரெசிடென்சீஸ் பிஎல்சியின் பங்குதாரர்களின் 17வது வருடாந்த பொதுக்கூட்டம், பின்வரும் நடைமுறையுடன் 2022 ஆனி 30ம் திகதி காலை 10.00 மணிக்கு ஆன்லைன் மீட்டிங் பிளாட்ஃபார்ம் மூலம் நடைபெறும் என்பதை இதன் மூலம் அறியத்தருகின்றோம்.

## நிகழ்ச்சி நிரல்

1. சந்திப்பு அறிவிப்பு

2. 2022 பங்குனி 31, இல் முடிவடைந்த ஆண்டிற்கான இயக்குநர்களின் அறிக்கை மற்றும் கணக்கு அறிக்கைகள் மற்றும் கணக்காய்வாளர்களின் அறிக்கையைப் பெற்று பரிசீலித்தல்.

3. நிறுவன அமைப்பு முறையின் 29(1)(ஆ) பிரிவின் அடிப்படையில் திரு. என்.எல்.எஸ். ஜோசப், அவர்களை நிறுவன இயக்குனராக தேர்ந்தெடுத்தல்.

4. திரு. எஸ்.எம்.எஸ்.எஸ். பண்டார அவர்கள், கூட்டு நிர்வாகத்தின் சிறந்த நடைமுறைச் சட்டத்தின்படி சுழற்சி முறையில் வாரியத்திலிருந்து ஓய்வு பெற்று, தகுதியுடையவராக இருப்பதால், மறுதேர்தலை கோருகிறார்.

5. திரு. டி. சூரியஆராச்சி அவர்கள், கூட்டு நிர்வாகத்தின் சிறந்த நடைமுறைச் சட்டத்தின்படி சுழற்சி முறையில் வாரியத்திலிருந்து ஓய்வு பெற்று, தகுதியுடையவராக இருப்பதால், மறுதேர்தலை கோருகிறார்.

6. மெசர்ஸ் BDO Partners பட்டயக் கணக்காளர்களை அடுத்த ஆண்டு நிறுவனத்தின் கணக்காய்வாளர்களாக மீண்டும் நியமித்து, அவர்களின் ஊதியத்தை நிர்ணயிக்க இயக்குநர்களுக்கு அதிகாரம் வழங்குதல்.

7. 2022/23 ஆண்டிற்கான தொண்டு நிறுவனங்கள் மற்றும் பிற நன்கொடைகளுக்கான பங்களிப்புகளைத் தீர்மானிக்க இயக்குநர்கள் குழுவை அங்கீகரித்தல்.

இயக்குநர்கள் குழுவின் உத்தரவின்படி
பிரைம் லேண்ட்ஸ் ரெசிடென்சிஸ் பிஎல்சி

பீலே கன்சல்டிங் (பிரைவேட்) லிமிடெட்
(கையொப்பமிடப்பட்டது)
நிறுவனத்தின் செயலாளர்கள்
திகதி: 6 ஜூன் 2022

PRIME RESIDENCIES